**களனி பிரதேச சபை - 2022**

**------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களனி பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, களனி பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத் திகதியளவில் பிழையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 4,388,438 தொகை சரி செய்வதற்காக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 1,737,921 தொகையும், முன்னைய ஆண்டுகளுக்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 2,131,720 தொகையும் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 7 கணக்கு விடயங்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களின் படி கூட்டுப்பெறுமதி ரூபா 219,222,838 | வித்தியாசங்கள் தொடர்பாக பரிசோதனை செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மற்றும் துணைப் பதிவேடுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 153,152,579 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 66,070,249 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 கணக்கு விடயங்கள் தொடர்பான நிலுவை வருமானக் கூற்றின் கூட்டுப் பெறுமதி ரூபா 69,442,254 தொகை நிலுவை வருமான காலப்பகுப்பாய்வு அறிக்கையின் படி கூட்டுப் பெறுமதி ரூபா 67,683,174 தொகை காணப்பட்டமையால் ரூபா 1,759,080 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களியாட்ட மண்டப வாடகை பதிவேடு ஒன்று பேணப்படாமையினால் ரூபா 733,489 இற்கான வாடகை வருமானத்தை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | மீண்டும் வாடகைகக்கு கொடுக்கும் போது வாடகை பதிவேடு ஒன்று பேணப்படும் என. | பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 | 2009 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டு மீதி வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | புதிய வீதவரி ரேட்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) நிதிப் பிரமாணம் 371(ஆ) | 1997 ஆண்டு முதல் 2010 வரையான காலப் பகுதியில் வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 4,529,977 தொகை 2023 ஏப்ரல் 30 திகதியளவிலும் அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 4,529,977 தொகை 2023 ஏப்ரல் 30 திகதி அளவில் அறவீடு செய்யப்படுகின்றது என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 111,371,688 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 25,202,130 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 71,000,000 | 62,635,232 | 14,462,268 | 48,998,852 | 74,000,000 | 64,748,504 | 65,464,445 | 44,933,514 |
| (ii) | வாடகை | 28,175,400 | 31,913,924 | 30,789,868 | 22,830,680 | 22,878,949 | 26,328,512 | 24,014,130 | 22,267,194 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,700,000 | 3,426,652 | 3,426,652 | - | 1,700,000 | 899,394 | 899,394 | - |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 8,750,000 | 13,448,854 | 13,448,854 | 733,489 | 2,400,100 | 364,068 | 364,068 | 733,489 |
| | | 113,625,400 | 111,424,662 | 62,127,642 | 72,563,021 | 100,979,049 | 92,340,478 | 90,742,037 | 67,934,197 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| (i) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 48,998,852 இற்கான மீதியில் 10 | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | சட்டத்தின் படி நிலுவை வீதவரி மீதியை அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களை மிகைத்துள்ள ரூபா 11,788,626 தொகையாக இருந்தது. | எடுக்கப்படுகின்றது. | செய்யப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு ஆரம்பத் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி பெறுமதி ரூபா 42,319,901 தொகையில் 2023 மே 10 திகதி அளவில் அறவீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 16,749,161 தொகையாக இருந்தது. | 2023 ஆண்டின் போது நிலுவைத் தொகையில் ரூபா 7,198,254 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஆ) | வாடகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 73 வியாபார நிலையங்களின் ஒரு வருடத்தை மிகைத்துள்ள கொடுப்பனவுகள் புறக்கணிப்பட்ட மீதி ரூபா 9,492,140 தொகை ஆகும். | தொரண சந்தி கடையறைகள் எதிர்ப்பு விசாரணையின் படி அறவீகள் மேற்கொள்ளப்படும் என. | நிலுவை வியாபார நிலைய வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | கடை வாடகை அட்டவணையின் படி மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை பெறுமதி ரூபா 4,072,409 தொகையாக இருந்ததுடன், 27 கடைகளில் இருந்து ஆண்டின் போது எதுவித பணமும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்ப்பு விசாரணையின் படி அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படும் என. | -மேற்படி- |
| (iii) | இரண்டு சினிமா கொட்டகைகளில் 2020 ஜனவரி மாதம் முதல் நிலுவை வாடகை பெறுமதி ரூபா 425,145 தொகை 2023 ஏப்ரல் 30 திகதியளவிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சீல் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை சினிமா கொட்டகை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் சிக்கல்கள் | | |
| | களனி பிரதேச சபையினால் செயற்படுத்தப்படும் 4 தகனகூடங்களுக்காக 2023 ஏப்ரல் 30 திகதி வரை அனுமதிபத்திரம் பெற்றிருக்கவில்லை. | ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பப்படும் என. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| | மீளாய்வாண்டின் போது சயையினால் 4,255 டொன்கள் உக்கக் கூடிய குப்பைகள் மற்றும் 3,805 தொன்கள் உக்காத குப்பைகள் | சேதனப் பசளை செயற்களம் விரிவாக்குவதற்கு இடம் காணப்படாமை என. | ஆக்கபூர்மாக குப்பை முகாமைத்துவத் திட்டமொன்று தயாரித்துக் கொள்ள வேண்டும். |

அகற்றுவதற்காக ரூபா 74,003,563 தொகை செலவொன்று மேற்கொள்ளப்பட்டது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை<br>பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 6,550,000 தொகைக்கான 5 காணியின் நிலத்தின் அளவினை இனங்கண்டிருக்கவில்லை. | காணிகள் தொடர்பாக விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | தரை அளவினை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பொதுக் கிணறுகளுக்கான 2 காணிகளில் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் அகற்றப்பட வேண்டும். |
| (இ) | சபையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற 9 நூலகங்களின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,009,154 தொகை பெறுமதியான 4,861 புத்தகங்கள் காணாமல் போயிருந்தது. | பற்றாக்குறையை அறவீடு செய்வதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | பற்றாக்குறை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சுற்றுலா அமைச்சிலிருந்து 2008 ஜூலை 03 திகதி சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,195,000 பெறுமதியான டிரக்டர் வண்டியை உரித்தாக்குவதற்கு தேவையான ஆவணங்கள் 2019 ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் உரித்தாக்கியிருக்கவில்லை. | ஆவணங்களை மீண்டும் சமர்ப்பித்து உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரித்தாக்க வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் கடன் | | |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த, சேவையை விட்டுச் சென்றிருந்த, இறந்த மற்றும் ஓய்வுபெற்ற முறையே உத்தியோகத்தர் நான்கு பேரிடம் ரூபா 487,312 தொகையும், உத்தியோகத்தர் நான்கு பேரிடம் ரூபா 382,972 தொகையும், ஒரு உத்தியோகத்தரிடம் ரூபா 163,820 தொகையும், 6 உத்தியோகத்தரிடம் ரூபா 988,980 தொகையும் என 15 உத்தியோகத்தர்களிடம் கூட்டுப்பெறுமதி ரூபா 2,023,084 தொகை ஊழியர்கடன் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. | பிணையாளர்கள் ஓய்வுபெற்று மற்றும் வெளிநாடு சென்றிருத்தல், இறப்பு மற்றும் ஓய்வு ஊதிய பணிக்கொடை கிடைத்திருக்காமை போன்ற காரணங்களினால் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவீடு செய்ய வேண்டும். |